விலை: சதம் 75 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஐப்பசி 27 முஹரம் 14 இதழ் 270
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12-11-1981

## மன்னாருக்கு சலுகைவழங்க கோரிக்கை

(மன்னார்)

எதிர்வரும் ஆசிரிய நியமனத்தின் போது மன்னார் மாவட்டத்தில் க. பொ. த. சாதாரண வகுப்பு சித்திய டைந்தவர்களுக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றினை இலங்கை தமிழ் ஆசிரியர்சங்கத்தின் மன்னார் மாவட்டக்கிளை மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைதத்லைவர் திரு. பி. எம். செபமாலையிடம் கையளித்துள்ளது.

## இந்த அரிசியை தனியார் கடைக்கு விற்க வேண்டாம்

### கூட்டுறவு ஆணையாளர் உத்தரவு

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தும்சபையிடமிருந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் அரிசியை கூட்டுறவுக்கடைகள் தனியார் வர்த்தகர்களுக்கு விநியோகம் செய்யக்கூடாது!

இவ்வாறு கூட்டுறவு ஆணையாளர் சகல கூட்டுறவுச்சங்கங்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கூட்டுறவுக் கடைகளில் குறைந்த விலையில் விற்கப்படும் அரிசியைப் பெருமளவில் வாங்கும் தனியார் வர்த்தகர்கள் தமது கடைகளில் அதிகவிலைக்கு விற்றுவருவதைத் தவிர்க்கும் பொருட்டே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத் தேவையான அரிசியின் அளவை உரியகாலத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு அறிவித்து அவற்றைப்பெற வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# 'பட்ஜட்' யோசனைகள் இன்று மாலையில் வெளியாகும்!

## விவாதம் 16ல் ஆரம்பம்

[கொழும்பு]

**இன்று 'பட்ஜட்' தினமாகும். பலரும் எதிர்பார்க்கும் வரவுசெலவுத் திட்ட [பட்ஜட்] உரையை நிதி, திட்டமிடல்அமைச்சர் திரு. றொனி டி மெல் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு பாராளுமன்றத்தில் நிகழ்த்துவார். முக்கியமான 'பட்ஜட்' யோசனைகளை நிதியமைச்சர் இன்று மாலை ஆறு மணிக்குப்பின்னர் வெளியிடுவார்.**

பாராளுமன்றம் இன்று பிற்பகல் 2 மணிக்குக் கூடும்போது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் ஐந்தாவது வரவு செலவுத் திட்ட உரையை நிதி அமைச்சர் ஆரம்பிப்பார்.

பட்ஜட் யோசனைகள் தேநீர் இடைவேளைக்குப் பின்னர் அநேகமாக மாலை ஆறு மணிக்குப் பின்னரே வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் இம்மாதம் 16ம் திகதி ஆரம்பமாகும். இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இம்மாதம் 24ம் திகதி இரவு நடாத்தப்படும். குழுநிலை விவாதம் இம்மாதம் 30-ம் திகதி ஆரம்பமாகும். டிசம்பர் மாதம் 22ம் திகதி இரவு எட்டு மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும். (ம)

## ஓமானில் பலியானவர் சடலத்தை கொண்டுவர யாழ். எம். பி. நடவடிக்கை

[கோண்டாவில்]

ஓமானில் நிகழ்ந்த தீவிபத்தில் மரணமான கொக்குவிலைச் சேர்ந்த கே. பாலசுப்பிரமணியத்தின் சடலத்தை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இ.போ. சபையின் முன்னாள் பஸ் சாரதியான இவரும் தவாலியைச் சேர்ந்த ஒருவரும் ஓமானில் தீவிபத்தில் பலியானது தெரிந்ததே.

இவர்களது சடலம் இலங்கைக்கு கொண்டுவர முடியாது கருகிய நிலையில் இருப்பதாக ஓமானிலிருந்து அறிவிக்கப்பட்டபோதிலும் பாலசுப்பிரமணியத்தின் மனைவி யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனிடம் இது சம்பந்தமாக முறையிட்டதைத் தொடர்ந்து அவரது சடலத்தை இலங்கைக்குக் கொண்டுவர இப்பொழுது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது குறித்து யாழ். எம். பி. இன்று வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொள்வார்.

இதற்கிடையே, பாலசுப்பிரமணியத்தின் சடலத்தை ஓமானில் அடக்கம்செய்வதற்கு ஓமான் அரசு யாழ். பொலிசாருடன் தொடர்பு கொண்டு மனைவியின் சம்மதம் கோரப்பட்டதாகவும் மனைவி இதற்கு மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வரிகள் அதிகரிக்கப்படும்?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் உப அலுவலகங்களான முன்னைய கிராம சபைகள், பட்டின சபைகளினூடாக அறவிடப்படும் ஆதனவரி, வாகனவரி, கேளிக்கைவரிகளை அதிகரிப்பது சம்பந்தமாக ஆலோசனை நடத்துவதற் பொருட்டு ஒரு குழுவை யாழ். அபிவிருத்தி சபை நியமித்துள்ளது.

இக் குழுவில் உறுப்பினர்களாக திரு. வி. தருமலிங்கம் எம். பி. அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. க. சின்னத்துரை, பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அவரன் அம்பிரட் வீடமைப்பு உதவிஆணையாளர் திரு டி. காமதேவன், அபிவிருத்தி சபை உதவிச்செயலாளர் திரு. யாகசிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (யா)

## மின்சாரசபை ஊழியர் சம்பளத்திட்டம் அங்கீகாரம்

கொழும்பு

மின்சார சபை ஊழியருக்கானபுதியசம்பளத்திட்டத்தை அமைச்சரவை நேற்று அங்கீகரித்துள்ளது.

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும், மதபோதனையை கட்டாயபாடமாக்குவது பற்றியும் அமைச்சரவைக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு, இது பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்விஅமைச்சர் பணிக்கப்பட்டுள்ளார். க

## கொள்ளைச்சம்பவங்கள்: நால்வருக்கு றிமாண்ட்

(யாழ்ப்பாணம்)

ஊரெழுவில் நடைபெற்ற கொள்ளை தொடர்பாக யாழ் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட நால்வரும் நேற்று நண்பகல் யாழ் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இம்மாதம் 20ம் திகதி அடையாள அணிவகுப்பு நடாத்துமாறும், அதுவரை றிமாண்டில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தம்பையா பிரேமச்சந்திரன் [கொக்குவில் கிழக்கு], செல்வரத்தினம் செல்வச்சந்திரன் [கோண்டாவில் மேற்கு] தம்பிப்பிள்ளை பத்மநாதன் [கொக்குவில்], கிட்ணர் தேவராசா (கொக்குவில் கிழக்கு) ஆகிய நால்வரையும் யாழ் குற்றத்தடுப்பு விஷேச பிரிவுப் பொறுப்பதிகாரி கிருஷ்ணதாசன் தலைமையில் சென்ற பொலிசார் கைது செய்திருந்தனர். இவர்களில் சந்தேக நபர் கிட்ணர் தேவராசாவைத் தவிர மற்றைய மூவருடன் சரவணை நாகேந்திரன் என்பவரும் சேர்ந்து ஆனைக்கோட்டையில் நடைபெற்ற 11,625 ரூபா நகை மற்றும் பொருள் கொள்ளையில் ஈடுபட்டதாகவும் நீதவானுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொள்ளைகள் தொடர்பாக மேலும் ஒருவரை பொலிசார் தேடிவருகின்றனர். (ம)

## களவு மாடுகளுடன் லொறி பிடிபட்டது: இருவர் றிமாண்டில்

(யாழ்ப்பாணம்)

களவாக மாடுகளை ஏற்றிச் சென்றவர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்! இச்சம்பவம் நீர்வேலியில் இடம்பெற்றது.

சுன்னாகம் பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் எஸ். டி. எஸ். கே. பெர்னாண்டோ தலைமையில் சார்ஜன்டுகள் எஸ். துரைசிங்கம், எஸ். சிவலிங்கம், பொலிஸ் உத்தியோகத்தர் பியசேன ஆகியோர் ரோந்து சுற்றி வரும்பொழுது சி. வி. 2608 இலக்கம் கொண்ட சிறிய லொறியொன்றில் சாரதி உட்பட மூவர் மாடுகளை ஏற்றிச்செல்வதைக் கண்டு சந்தேகத்தின் பேரில் லொறியை மறித்து விசாரணை நடத்தியபோது, வேலுப்பிள்ளை துரைசுவாமி என்பவருக்குச் சொந்தமான மாடுகளே களவாடப்பட்டு லொறியில் ஏற்றப்பட்டதாகத் தெரியவந்தது. பொலிசார் குறித்த நபர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யேசுதாசன் சூரியதாசன், லொறிச் சாரதி ஜோனின் கியோமா, நீர்வேலியைச் சேர்ந்த ஆறுமுகம் [illegible] ஆகிய மூவரையும் கைது செய்து லொறியையும் கைப்பற்றி யாழ் நீதிமன்றத்தில் நீதவான் ரி ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

லொறிச்சாரதியை 5ஆயிரம் ரூபா பிணையில் செல்லுமாறும், மற்றைய இருவரையும் இம்மாதம் 18ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (மா-வி)

## துணிக்கை

[illegible]

## வவுனியா புத்தர் சிலை: அமைச்சரவை முடிவுக்கு விவகாரம் விடப்படும்

(வவுனியா)

**வவுனியாவில் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் எவருடைய அனுமதியுமின்றி வைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர் சிலையை அகற்றவேண்டாம் என ஜனாதிபதி புதிய உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.**

இரவோடிரவாக வவுனியா கச்சேரி சந்தியில் நிறுவப்பட்ட இப்புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்படும் என ஜனாதிபதியும், கலாச்சார அமைச்சரும், பதில் மாவட்ட அமைச்சரும் ஏற்கனவே உறுதி அளித்திருந்தும், இந்த உத்தரவாதத் துக்கமைய இச்சிலையை அகற்றுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தும், நேற்று 11ம் திகதி இச்சிலையை அகற்றி அரசாங்க அதிபரிடம் ஒப்படைப்பதென மாநாடு ஒன்றில் ஒப்பந்தம் எழுதப்பட்டிருந்த போதிலும் இப்போது ஜனாதிபதியினால் சிலையை அகற்ற வேண்டாம் எனப் புதிதாக உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்விவகாரம் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் மீள் ஆலோசனை செய்த பின்னரே ஜனாதிபதி இறுதிமுடிவெடுப்பார் எனத் தெரிகிறது.

நேற்றுக்காலை பௌத்தமத அனுஷ்டானங்கள் இங்கு நடைபெற்றதாக நமது நிருபர் தெரிவிக்கிறார்.

இவ்வனுஷ்டானத்தின் போது பௌத்த மதகுருமாரும் பாடசாலைமாணவர்களும் பௌத்தசமயப் பிரமுகர்களும்

[6-ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

கணப்பொழுதைக் கல்பகாலமாக்கவல்லதும், கல்ப காலத்தைக் கணப்பொழுதாக்கவல்லதும் மனது.

— அருள்விருந்து

## நமது நோக்கு

# மனித உரிமைக்கு மதிப்பு?

வடபகுதியில் கைதாகி விசாரணைகள் எதுவுமின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் வாலிபர்கள் பற்றிப் பலதடவை பலநாடுகளில் பல குரல்கள் எழுப்பப்பட்டன. சர்வதேச மன்னிப்புச் சபைக்கு எமது நன்றி.

கடந்த வருட இறுதியில் கொழும்பில் நடைபெற்ற மனித உரிமைக் கருத்தரங்கிலும் மாநாட்டிலும் இந்த விடயம் இடம்பெற்றது. இது பற்றி 'மேர்ஜ்' என்ற "இனங்களுக்கிடையே சமத்துவமும் நீதியும் பேணும் இயக்கம்" நாடு முழுவதிலும் பிரசாரம் செய்து பெரும் பணி ஆற்றியது குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகளைப்பேணுவதில் தாம் எந்த நாட்டுக்கும் பின்னிற்கவில்லை என்று வீரம் பேசிவரும் இலங்கை அரசு தடுப்புக்காவலிலுள்ள தமிழ் இளைஞர்களுக்கு அடிப்படை உரிமை வழங்கத் தயங்கியது பெரும் ஏமாற்றத்தை அளித்து வந்தது.

இன்று கிடைக்கும் செய்தி இவர்களுக்காகப் பரிந்து பேசியவர்களுக்கும், மனித உரிமைகளில் உண்மையான அக்கறை கொண்டவருக்கும் உற்சாகம் அளிக்கும்.

வடபகுதியில் எவ்வித விசாரணையுமின்றி கைதிகளாக வெவேறுமுகாம்களில் வாடிவரும் தமிழ் இளைஞர்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை உலகளாவிய வேண்டுகோள் விடுத்திருந்தது வாசகர்களுக்குத் தெரிந்ததே.

இந்த வேண்டுகோளுக்கு இலங்கை அரசமளிப்பளித்து சர்வதேச மன்னிப்புச்சபை அங்கத்தவர்களுக்கு கடித மூலம் விபரங்களைத் தெரிவித்ததாக ஆச்சபை தனது பத்திரிகைச் செய்திமூலம் தெரிவித்துள்ளது.

சட்டத்துக்கு மதிப்பளித்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களுக்கு எதிராக வழக்கிருந்தால் அவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவார்கள். போதிய சாட்சியங்கள் இல்லாதவிடத்து அவர்கள் விடுவிக்கப்படுவர் என்று இலங்கை அரசாங்கம் பதிலளித்திருக்கிறது.

இந்தப் பதில் எவ்வாறு அமுல் செய்யப்படுமென நாம் உறுதிகூறமுடியாது. இங்கு நடைபெற்ற பயங்கரவாதக் கொலைகளை நாம் இடித்துரைக்கக் கண்டித்தும், இவற்றைச் செய்த கொலைகாரரைக்கண்டுபிடிப்பதில் அரசும் மக்களும் பொலிசாருக்கு உதவ வேண்டுமெனவும் அடிக்கடி கருத்து வெளியிட்டோம்.

அது அவ்வாறுக, தடுப்புக்காவலில் இருக்கும் இளைஞர்கள் பற்றிய விபரம் பெற்றோருக்குத் தெரியாத நிலையும் தெரிந்தும் அவர்களின் சட்டத்தரணிகள் அவர்களைச் சந்திக்க முடியாத நிலையும் அவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற புகாரும் - இவையெல்லாம் நீதிக்கு மாறானவையென்று நாம் மட்டுமல்ல உலக நாடுகளெல்லாம் எடுத்துக் கூறின.

இதற்கு மூலகாரணமான சர்வதேச மன்னிப்புச் சபைக்கு மனித உரிமை அபிமானிகள் அனைவரும் கடமைப்பட்டவர்கள்.

அரசை எதிர்நோக்கும் சவாலை நாம் பொருட்படுத்தாமலில்லை ஆனால் அடிப்படை உரிமைகளுக்கு மாறான எந்த அநீதியையும் நாம் எதிர்க்கவேண்டியது கடமை.

இதற்கு துணையாக இருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை இவ்விடயத்தில் விழிப்பாக தொழிற்படுதல் அகில உலகத்துமே நன்மை பயக்கும்.

## புலிச்சித்திரம்

ஒரு கேலிச்சித்திரம் ஒன்பது கட்டுரைகளுக்கு நிகராக கருத்தை வெளியிடவல்லது; பெண்ணைப்போல ஆவதும் அதனாலே அழிவதும் அதனாலேயென்று சொல்லவல்ல காரசாரமான சித்திரங்களை நாம் பத்திரிகைகளில் பார்த்ததுண்டு.

கடந்த ஞாயிற்றுக்கிழமை "தி ஐலண்ட்" என்ற புதிய ஆங்கில வார இதழில் வெளியான புலிக்கேலிச்சித்திரம் இத்தகைய சித்திரமென்று சொல்வதற்கில்லை. நாம் குறிப்பிடும் சித்திரத்தில் கேலி உண்டு. புலி உண்டு. கருத்தில்லாமையால் அது ஆக்கவோ அழிக்கவோ ஆற்றலற்றிருக்கிறது.

படுத்திருக்கும் புலியின் VIOLENCE (வன்செயல்) என்று குறிசுட்டப்பட்டிருக்கிறது; நெற்றியில் விபூதி (மேனாளசெல்வம்) பொட்டு இவைப்பிடிக்க இருபெருந்தலைவர்கள் எத்தனிக்கிறார்கள்-ஒருவர் ஜனாதிபதியென்பது தெளிவு; மற்றவர் TULF யார் ஆசாமியென்பது தெளிவில்லை. ஜனாதிபதி TULF- என்ற மனிதனை புலியின் தலையைப் பிடிக்கும்படி ஏவுகின்றார் இருவரும் மலைத்து அல்லது அஞ்சி நிற்பதுபோல் தெரிகிறது.

ஏன் இந்த அச்சம் என்பது புரியவில்லை. பயங்கர புலியைக் கொன்று தோலை அரையில் உடுத்தியவர் சைவர்கள் வணங்கும் பரம பிதாவாகிய சிவபெருமான்.

திருநீறு அணிந்து நெற்றிக்கண்ணைத் திறக்கும் திலகத்தை அணிந்த புலி ஆக்கம் ஈட்டற்றம் பெற்ற பகைவையே ஒழிக்கும். எனவே ஒரு பொல்லாப்புமில்லை. பல பேரைக் கொன்ற புலியாகவிருப்பதும் காணப்படுகிறது. ஞானம் பின்பு பிறந்திருக்கலாம். ஆனால் சைவசின்னந்தரித்த எந்த உயிரினத்தாலும் ஒரு பொல்லாப்பும் நேர்ந்துவிடமாட்டாது. இது போலி வேடமாகவிருந்தால் இது புலித்தோல் போர்த்த பசுவாகலாம். அது பொல்லாதது. ஆனால் கொல்லாது.

# "மாவட்ட அபிவிருத்தி சபைகள் வீண்விரயங்களுக்கு முற்றுப்புள்ளி வேண்டும்"

## பிரதமர் கருத்து

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்தி சபைகள் சமர்ப்பிக்கும் திட்டங்களின் அடிப்படையிலேயே பன்முக வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று திரு. ஆர். பிரேமதாசா கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்ட சபைத் தலைவர்களின் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"மாவட்ட அபிவிருத்தி சபைகள் வீண்விரயங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து செலவுகளைக் குறைக்கவேண்டும். அந்தந்த மாவட்டங்களில் காணப்படும் இயற்கை வளங்களை பயன்படுத்தி பொருளாதாரத் துறையில் அபிவிருத்திசபைகள் முன்னேற வேண்டும்.

இக்கூட்டத்தில் கொழும்பு, களுத்துறை, கம்பஹாமாவட்ட அபிவிருத்தி சபை செயலாளர்களும் மாவட்ட அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

(வெ)

## மக்கள் கருத்து

### பஸ்சாரதிக்கு இது அடுக்குமா?

கடந்த 9ம் திகதி இரவு சுமார் 7-25 மணியளவில் கடமை முடிந்து எனது வசிப்பிடமாகிய திருநெல்வேலிக்கு வருவதற்காக நெலியடி பேரூந்துத் தரிப்பிடத்தில் நின்றேன். என்னுடன் இன்னும் 10, 12 பேர் நின்றிருப்பார்கள் வெகுநேரமாக காத்திருந்ததின் பின்தான் அந்த 7.25 க்கு அசுர வேகத்தில் வெற்று பஸ்வண்டி ஒன்று வந்தது. எல்லோரும் ஏறுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தோம். அசுர வேகத்தில் வந்த அந்த வண்டி சற்று வேகம் குறைந்து மின்னல்வேகத்தில் பறந்துவிட்டது நாங்கள் நான்கு, ஐந்துபேர்கள் ஏறவில்லை பஸ் காப்பாளர் பஸ்சை நிறுத்தும்படியாக மணி அடித்ததை எமக்குக்கேட்டது. நாங்களும் பஸ்சுடன் சிறிதுதூரம் ஓடிப்பார்த்தோம் ஆனால் பஸ் டிரைவரோ நிற்பாட்டவில்லை ஒருவேளை அவருக்குப் பசி எடுத்துவிட்டதோ என்னவோ அதனால்தான் பசுபறந்தது போலும். பஸ் வந்ததிற்கும் புறப்பட்டதிற்கும் மிகச் சொற்ப நேரம்தான் இருக்கும். பஸஸில் சாரதி வந்தாரோ? என்ற சந்தேகம்தான் அங்கு நின்றவர்கள் மத்தியில் எழுந்தது. பின்பு நாங்கள் 1மணித்தியாலம் காத்திருந்து சுமார் 8 30 மணிக்கு வந்த பஸ் வண்டியில் வீடு வந்து சேர்ந்தோம். நல்லவேளையாக அந்த பஸ்நின்று எங்களைக் கொண்டு வந்து சேர்த்துவிட்டது. அது தான் கடைசி பஸ்.

இப்பேர்ப்பட்ட கடமையுணர்ச்சியற்ற ஊழியர்கள் இ.போ.ச. வில் சேவை புரிவதனால்தான் அது வருமானத்தில் சோபை இழந்து காணப்படுகின்றது.

எம். மார்க்கண்டு
திருநெல்வேலி

ஃ ஃ

இம்மாதம் 5-ம் திகதி மாலை 5-00 மணியளவில் வட்டுக்கோட்டை பஸ்தரிப்பு நிலையத்தில் காரைநகருக்குச் செல்ல இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள், முதியோர் உட்பட பலர் உதைபந்தாட்டப் போட்டி பார்த்துவிட்டு வந்து நின்றனர். அப்போது ஒருபஸ் தரிப்பில் நின்று சில மாணவிகளையும், பெரியோர்களையும் ஏற்றிய பின் உடனடியாக பஸ் நகர ஆரம்பித்துவிட்டது. அங்கு நின்ற இளைஞர்கள் ஏற முடியாதுபோக பஸ் முன்னேறிச்சென்றது. அதில் ஏறக்குறைய 35 பேர் ஏறமுடியாது நின்றனர். பஸ் சில யார் தூரம் சென்றதும் அடிக்கடி "பிறேக்"பிரயோகிப்பட்டதால் உள்ளே நின்றுகொண்டிருந்த மக்கள் விழநேர்ந்தது. சாரதி மதுபோதையில் உள்ளார் என பிரயாணிகள் கூறிக்கொண்டு பயத்தபடியே பிரயாணம் செய்தனர். அத்துடன் சாரதி சீருடை அணிந்திருக்கவில்லை. இவ்வளவுக்கும் பஸ் நடத்துனர் சிரித்தபடியே உள்ளே நின்றார்.

இப்படியான சீர்கேடுகள் அரச போக்குவரத்துசேவையில் நடக்காதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

த. சோதிலிங்கம்
வட்டுக்கோட்டை

## நூரளை இலங்காதீஸ்வரர்

நுவரேலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நூரளை ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தின் வரலாற்றையும் அதன் சிறப்பையும் விளக்கும் நூல் ஒன்றைப்பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்து சமயத் திணைக்களம் வெளியிட்டிருக்கின்றது.

கோவிலின் முகப்புத் தோற்றத்தை முகப்பாக அட்டைப்படமாக ஏந்தி வெளிவந்திருக்கும் இந்நூலினை முன்னாள் உதவிப் பரீட்சை ஆணையாளர் வே.சதாசிவம் அவர்கள் எழுதியுள்ளார்.

மிக அண்மையில் - 1978-ம் ஆண்டு 10-ம் மாதம் 16-ம் திகதியன்றுதான் இத்தலம் ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் இப்பொழுதே இதன் மகிமை வெளிப்படத்தொடங்கியிருப்பதை ஆசிரியர் மிகக் கவனமாக அவதானித்துக்குறிப்பிட்டுள்ளார்.

"லிங்கப்பிரதிஷ்டை செய்த அதே நேரம் ஒவ்வொருநாளும் 12 மணி பூஜை நடைபெறும் பொழுது வரட்சி வெய்யிலிலும் மழை சொட்டுவது போன்ற ஓர் அற்புதமான சத்தம் கூரையின் மேல் இரண்டு நிமிடங்களுக்குக்கேட்கின்றது பளிங்கு போன்ற லிங்கமேனியிலிருந்து வேர்வைத்துளிகள் வழிந்து கொண்டிருக்கின்றன பிரதிஷ்டை செய்தநாட்களிலிருந்து இதுவரை நம்பத்தக்க அளவு ஓர் அங்குலவளர்ச்சியும் லிங்கம் அடைந்துள்ளது" என்று ஆசிரியர் குறிப்பிடுவது மனதைக்கவர்வதாய் உள்ளது. "...ஆகிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாக இலங்காதீஸ்வரர் என்ற பொதுப்பெயர் பொருத்தமுடன் தந்து அருள் ஆட்சிப் பரப்பின மஞ்சுதோய் மத்திய மலைப்பிரதேசத்துக்கும் விஸ்தரித்து இதுவரை மலையக மக்களுக்கு சிவத்தலமில்லாத ஒரு பெருங்குறையை நீக்கியிருக்கிறது..." என்றுமிகப்பொருத்தமாகச் சுட்டிக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

இத்தலம் அமைந்துள்ள பகுதியிலேயே இராவணேஸ்வரன் சிவபூஜை செய்தும் கடுந்தவம் இயற்றியும் சிவபிரானிடம் அற்புதமான வரங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்ற ஐதீகக்கருத்து உறுதியாகும் விதத்தில் இந்நூலில் குறிப்புகள் உள்ளன. இது பற்றி ஆராய்கிறவர்களுக்கு இந்நூலில் குறிப்புகள் பெரிதும் உதவும்.

"ஸ்ரீநகர்" என்றழைக்கப்படும் இக் கோயிற்றலத்தில் இராவணேஸ்வரனின்புதல்வன் மேகநாதன் என்பான் தனது தந்தையாரின் ஞாபகார்த்தமாகவும் நற்கதிக்காகவும் சுயம்புலிங்கம் வைத்துப்பூஜித்ததாகவுள்ள ஐதீகத்தையும் ஆசிரியர் நினைவூட்டுகிறார்.

வட இந்தியாவிலுள்ள புனித நர்மதா நதியில் கண்டெடுத்த சுயம்புலிங்கத்தை ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் அவர்கள் தாமே பிரதிஷ்டை செய்தும் உதவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்திருக்கோயிலைப் பற்றிய விபரமும் நூலின் விளக்கமும் சிங்களம் - ஆங்கில மொழியிலும் தரப்பட்டுள்ளன. ஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் அவர்களைப்பற்றியும் ஒரு குறிப்பு இடம் பெற்றிருப்பின் நூல் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

சு. நடேசபிள்ளையின் உரைநடையெனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்ட ஒரு கட்டுரையும் ராவணன் பற்றிய வேறு குறிப்புகளும் நூலில் இடம் பெற்றுள்ளன. இராமபிரான் அயோத்தியிலிருந்து இலங்கைக்குவந்த வீதியைக் காட்டும் வரைபடமும் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்காதீஸ்வரர் ஆலயம் உருவாவதற்குகாலவிருந்தும் உதவியும் ஒத்தாசையும் வழங்கியுள்ள பிரதேச அபிவிருத்தி அமைச்சு இந்நூல் வெளிவருவதற்கும் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது பாராட்டுக்குரியது. இதுபோன்ற ஏனைய பழைய புதிய திருத்தலங்கள் பற்றிய ஸ்தல புராணங்களும் வெளிவர அமைச்சு ஒரு நிதியை ஒதுக்கி உதவலாம். இலங்கையிலுள்ள சைவ ஆலயங்கள் பற்றி ஆராய்பவர்களுக்கு இதுபயன் தரும்.

— பேனு

## மீண்டும் வேலை கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஆளணி உதவியாளராகக் கடமையாற்றி கடந்த ஆண்டு ஜூலையில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தினால் வேலையிழந்திருந்த திரு. வ. க. சாம்பசிவத்திற்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பிராந்திய அமைச்சுச் செயலகத்தில் பணியாற்றுவதற்கு இவர் அமர்த்தப்பட்டுள்ளார்.

யாழ் கச்சேரியில் இவர் பணியாற்றிய காலத்தில் இவர் இக்காரியாலய நலன்புரிச்சங்கத்தின் தலைவராயிருந்து சேவையாற்றினார்.

## இப்படியும் நடக்கிறது

இலங்கை நூலக சங்கம் நடத்திய நூலகவியல் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய ஒரு பெண்ணுக்குக் கிடைத்த பரீட்சைப்பெறுபேறு பத்திரத்தில் இரண்டு பாடங்களில் அவர் சித்தியடைந்திருப்பதாகவும், ஒரு பாடத்துக்குச் சமுக மளிக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பரீட்சைப் பெறுபேறு விபரத்தைக் கண்டதும் அந்தப் பெண்ணும் திகைப்படைந்து கொள்ள முடியவில்லை! "எல்லாப்பாடங்களுக்கும் தோற்றியும் எப்படி ஒரு பாடத்துக்குச் சமுகமளிக்கவில்லை என்று அறிவிக்க முடியும்?" - மூளையைக் குழப்பிய அவர், தமது பரீட்சை முடிவுகளை ஆட்சேபித்து இலங்கை நூலக சங்கத்துக்கு முறையிட்டார். முடிவு —

நூலகவியல் இறுதிப் பரீட்சையில் அவர் தோற்றிய ஐந்து பாடங்களிலும் அவர் சித்தியடைந்திருப்பதாக நூலக சங்கம் அறிவித்து, சான்றிதழும் வழங்கியுள்ளது!

காதோடுகாதாக: பரீட்சைக்குத் தோற்றிய பெண் யாழ். பொது சன நூல் நிலைய நூலகர் திருமதி ஆர். நடராசா. இவர் பரீட்சைக்குத் தோற்றிய திகதி யாழ். நூலகம் எரிந்துபோன காலப்பகுதியான 81 ஜூன் 28!

—ஊடுருவி

## 26 இளைஞர்களை ஏமாற்றியவருக்கு 23ம் திகதி வரை றிமாண்ட்!

(மாவிட்டபுரம்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி குறித்துக் கைதான நபர் இம்மாதம் 23-ம் திகதி வரை மல்லாகம் நீதிபதியால் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

டுபாயில் வேலை பெற்றுத் தருவதாக பல இளைஞர்களிடம் பணம் வாங்கிய வீமன் காமத்தைச் சேர்ந்த சுவரப் பிள்ளை சற்குணராஜா என்பவர் அண்மையில் 26 இளைஞர்களை கொழும்பிலிருந்து டுபாய்க்கு விமானம் ஏற்றிவிட்டிருந்தார். விமான மூலம் டுபாய் சென்ற இளைஞர்கள் அங்கு தாம் ஏமாற்றப்பட்டதை அறிந்து அலைக்கப்பட்டு, கடைசியில் 'எயர் லங்கா' விமான மூலம் இங்கு திரும்பி வந்து யாழ் பொலிசில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து மேற்படி நபரைத் தேடிப் பொலிசார் வலை விசியிருந்தனர்.

சந்தேக நபர் முழங்காவிலுக்கு சென்று ஒளிந்திருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து யாழ். குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. தவலிங்கம், சார்ஜன்ட் பிள்ளை ஆகியோர் கொண்ட பொலிஸ் கோஷ்டி அங்கு விரைந்து இவரைக் கைது செய்தது.

மல்லாகம் நீதிமன்றத்தில் இவர் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 23ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீதரன் ஆஜரானார். வழக்காளிகள் தரப்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

மேற்படி நபர் ஏற்கனவே டுபாயில் இருந்த சமயம் அங்கும் சில மோசடிகளைச் செய்துள்ளாரென்றும் அதன் காரணமாக டுபாய் பொலிசாரும் இவரைத்தேடி வருவதாகவும் தெரியவருகிறது.

## ஆண்டு இறுதிப்பரீட்சை: ஆசிரியர் சங்க யாழ். கிளை கல்வி அமைச்சரிடம் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 28ம் திகதியும், டிசம்பர் 5ம் திகதியும் ஆகிய சனிக்கிழமைகளில் பாடசாலை ஆண்டு இறுதிப்பரீட்சை நடாத்துவதை இலங்கை ஆசிரியர் சங்க வடமாகாணக்கிளை ஆட்சேபித்து கல்வி மந்திரிக்கு கடிதம் எழுதியுள்ளது.

பாடசாலைகளிலுள்ள 6, 7, 8, 9ம் வகுப்புக்களுக்கு ஆண்டு இறுதிப்பரீட்சைகள் சனி, ஞாயிறு உட்பட மற்றும் விடுமுறை நாட்களில் நடத்துவதில்லை என்று முன்பு கல்வி அதிபதி உத்தரவாதம் அளித்திருந்தார். ஆனால் இவ்வாண்டு நடைபெறவிருக்கும் ஆண்டு இறுதிப்பரீட்சைகள், மேற்குறிப்பிட்ட திகதிகளில் நடாத்தப்படவிருப்பதாக பாடசாலைகளுக்கு சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வறிவித்தலை உடனடியாக ரத்துச் செய்யும்படி அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள், வடமாநிலக் கல்விஅதிபதி, கல்விமந்திரியின் நிரந்தரச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(மா)


சுப்பர் லைட்னிங் எக்ஸ்பிரஸ் கொம்பனி லிமிட்டெட்

**ஸ்தாபனத்தாரின் மகிழ்வான செய்தி**

உங்கள் பயணம் சொகுசானதாக அமைய
ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பயணச் சேவை
கொழும்பு - யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை
காங்கேசன்துறை - யாழ்ப்பாணம் - கொழும்பு

நீண்டகாலமாக யாழ்ப்பாண மக்கள் அனுபவித்து வந்த கஷ்டத்தை நீக்கும்பொருட்டு பல லட்ச ரூபா செலவில் சிங்கப்பூரிலிருந்து வருவிக்கப்பட்ட பொறியியலாளர்களின் மூளைவளங்களை பயன்படுத்தி அவர்களது நேரடி கண்காணிப்பில் உள்ளூரில் நிர்மாணிக்கப்பட்ட

உறங்கல் இருக்கை வசதி கொண்ட

**'லக்ஸறி ருறிஸ்ட் பஸ்கள்"**

சேவைக்கு விடப்படுகின்றன.

நீண்டதூர பயணத்தை மகிழ்வுடனும் லாபத்துடனும் கடக்கலாம்.

கட்டணம்:

**ரூபா 65-00** (ஒரு வழிப்பயணத்திற்கு மட்டும்)

புறப்படும் நேரங்கள்

★ தினசரி பிற்பகல் 6-30 மணிக்கு காங்கேசன் ரவல்ஸ் ஸ்தாபனத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்தடைந்து, இரவு 8-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு அதிகாலை 5-30 மணிக்கு கொழும்பு சென்றடைந்து தெகிவளை சந்தி வரை சேவையாற்றும்.

★ தினசரி பிற்பகல் 6-45 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்திலிருந்து கொழும்பு ஒல்கொட் மாவத்தையை கோட்டை புகையிரத நிலையம் முன்பாக) வந்தடைந்து அங்கிருந்து இரவு 8-30மணிக்கு புறப்பட்டு அதிகாலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடைந்து காங்கேசன்துறை வீதி வழியாக காலை 6-15 மணிக்கு காங்கேசன்துறையை சென்றடையும்.

ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

கொழும்பு

ஜே. எம். எஸ். மிரண்டாஸ்
109, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 11.
போன்: 27031

லெக்ஷ்மி பவான்
(பிராமணாள் ஹோட்டல்)
97, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 11. போன்: 24821, 28244

யாழ்ப்பாணம்

ஸ்ரீ இராமகிருஷ்ண
இல. 9, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7497, 7065

ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்
141, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்,
போன்: 660.

காங்கேசன் ரவல்ஸ்
பிரதான வீதி,
காங்கேசன்துறை.
போன்: 34

தலைமையகம்

**சுப்பர் லைட்னிங் எக்ஸ்பிரஸ் கொம்பனி லிமிட்டெட்**

97, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 11.
போன்: 24821, 28244


## அரிசி கொண்டுசெல்வதை தடைசெய்யவேண்டும்

யாழ்ப்பாணம்

மாரிகாலத்தில் யாழ். மாவட்டத்திலிருந்து, வெளிமாவட்டங்களுக்கு அரிசி கொண்டு செல்வதை அரசாங்கம் உடனடியாக தடைசெய்யவேண்டுமென்னும் தீர்மானம் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் இக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

யாழ் மாவட்டத்திலிருந்து இக்காலத்தில் வெளிமாவட்டங்களுக்கு அரிசி கொண்டு செல்வதால், இங்கு அரிசிக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கறுப்புச் சந்தைக்காரர்கள் இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு, அதிக விலைக்கு, தரம் குறைந்த அரிசியை விற்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## வவனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமுகமாயிருந்தனர்.

கடந்த ஆகஸ்ட்மாதம் 15ம் திகதி நள்ளிரவு நிறுவப்பட்ட இப் புத்தர் சிலையை உடனடியாக அகற்ற வேண்டுமென்று வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், வவனியா மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. மு. சிற்றம்பலம் வவனியா நகரசபைத்தலைவர் திரு. ஐ. கேதீஸ்வரன் ஆகியோர் அவசரத்தந்தி மூலம் ஜனாதிபதியையும் கலாசார அமைச்சரையும் கேட்டிருந்தனர். இது சம்பந்தமாக மாவட்ட அபிவிருத்திசபை நகரசபை ஆகியன தீர்மானங்களும் நிறைவேற்றியிருந்தன.

### மாநாடும் ஒப்பந்தமும்

வவனியா பதில் மாவட்ட அமைச்சரும் அனுராதபுரம் மாவட்ட அமைச்சருமான திரு. அபேரத்ன மாநாடு ஒன்றைக்கூட்டி பௌத்த சமயச் சடங்குகளுடன் இச்சிலையை அகற்றி வவனியா அரசாங்க அதிபரிடம் ஒப்படைப்பதென முடிவுசெய்யப்பட்டது. இம்மகாநாட்டில் இதற்கென எழுதப்பட்ட ஒப்பந்தத்தில் இரு பௌத்தமதகுருமாரும் பௌத்த பிரமுகர்களும் கையெழுத்திட்டனர்.

கலாசார அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருல்லேயும் ஒரு மகாநாடு நடத்தினார். இதனையடுத்து ஜனாதிபதி இச்சிலையை சமயாஅனுஷ்டானங்களுடன் அகற்றும்படி உத்தரவொன்றைப் பிறப்பித்திருந்தார்.

இவ்வுத்தரவின்படி நேற்று இச்சிலை அகற்றப்படவில்லை. பதிலாக சமயச் சடங்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. (கா. அ)


பயிற்சி

**வெல்டிங், வயறிங் றீ வயின்டிங், மோட்டார் மெக்கானிசம், செய்முறை**

அறிமுறை வகுப்புகள் (14-11-81) ஆரம்பம். C E. T. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், (சாந்தி சினிமாவிற்கு முன்), 22, ராமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 1436



**அரிய சந்தர்ப்பம்**

Diploma in Hotel Management பயிற்சி மீண்டும் ஒரு புதிய வகுப்பு ஆரம்பம் 14-11-1981 O/L அல்லது N C. G. E. படித்த இருபாலரும் சேரலாம். 12-11-1981க்கு முன் விண்ணப்பப் பத்திரத்தை நேரில் பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

நாஷனல் அக்கடமி
மொம்சாக் கட்டிடம்
11, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

1427


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் 12-ம் திகதி அச்சிட்டுப் வெளியிடப்பட்டது. Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 883. 8126.